Regional Bulletin

Puducherry

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

நாள் 30.03.2024 சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பாரத ரத்னா விருதுகளை இன்று புதுடெல்லியில் வழங்கினார்.

தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்புகளை வெளியிட தேர்தல் ஆணையம் தடைவிதித்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மக்களவை தேர்தலில் போட்டியிடும் இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று மாலை வெளியிடப்படுகிறது.

புதுச்சேரி தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. குலோத்துங்கன் தலைமையில் இன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பாரத ரத்னா (17)

புதுடெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று காலை நடைபெற்ற விழாவில் குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, முன்னாள் பிரதமர்கள் சௌத்ரி சரண்சிங், பி.வி. நரசிம்மராவ், பீகார் முன்னாள் முதலமைச்சர் கர்பூரி தாக்கூர், பிரபல வேளாண் விஞ்ஞானி

எம்.எஸ். சுவாமிநாதன் ஆகியோருக்கு மறைவுக்கு பிந்தைய பாரத ரத்னா விருதுகளை வழங்கி சிறப்பித்தார். நாட்டின் முன்னாள் துணை பிரதமரும், பிஜேபியின் மூத்த தலைவருமான திரு.எல்.கே. அத்வானிக்கும் உயரிய சிவிலியன் விருதான பாரத ரத்னா விருது நாளை வழங்கப்பட உள்ளது.

-இந்த விருது வழங்கும் விழாவில் விருது பெற்றவர்களின் உறவினர்கள் கலந்து கொண்டு விருதுகளை பெற்றுக் கொண்டனர். குடியரசு துணைத் தலைவர் திரு. ஜெகதீப் தன்கர், பிரதமர் திரு.நரேந்திரமோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பீகார் முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார், காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் இந்த விழாவில் கலந்து கொண்டனர். நாட்டின் மிக உயரிய இந்த பாரத ரத்னா விருது ஒருவரின் தன்னிகரற்ற சேவைக்காகவும், செயல்திறனுக்காகவும் வழங்கப்படுகிறது.

ராஜஸ்தான் (11)

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி ஆகியோர் ராஜஸ்தான் உதய தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். ராஜஸ்தான் மக்கள் தங்கள் தனித்துவமான அடையாளத்தை பேணி நாட்டின் முன்னேற்றத்திற்கு விலை மதிப்பற்ற பங்களிப்பை தொடர்ந்து வழங்க வேண்டும் என குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு சமூக வலைதள பதிவு ஒன்றில்

கேட்டுக் கொண்டுள்ளார். பிரதமர் திரு. நரேந்திரமோடி ராஜஸ்தான் மக்கள் ஆற்றலும், உற்சாகமும் உடையவர்களாய், புதிய சகாப்தத்தை உருவாக்குவத்தில் மும்முரமாய் உள்ளதாக கூறியுள்ளார். வளர்ந்த மற்றும் தற்சார்பு இந்தியாவை உருவாக்குவதில் ராஜஸ்தானின் பங்கு முக்கியமானதாக இருக்கும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி தேர்தல் (17)

அடுத்த மாதம் ஏப்ரல் 19 ஆம் தேதி மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தேர்தல் நடத்தும் அதிகாரியும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான திரு. குலோத்துங்கன் தலைமையில் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகளுடனான ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேர்தலை சிறப்பாகவும், அமைதியாகவும் நடத்தவும், மக்கள் சிரமமின்றி வாக்களிக்கவும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. அனைத்து வாக்குச் சாவடிகளிலும் நிழல்பந்தல் அமைத்தல், குடிநீர் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயதானவர்கள் எளிதாக வந்து வாக்களிக்கும் வகையில் சாய்தளம் அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகளை, மாவட்ட தேர்தல் அதிகாரி கேட்டுக்கொண்டார். மகளிர் வாக்குச்சாவடி, இளம் வாக்காளர்களுக்கான வாக்குச்சாவடி, மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்குச்சாவடிகள் அமைப்பது குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட துணை

தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. வினயராஜ் மற்றும் அனைத்து உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு (6)

ரமலான் பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தில் 4ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பள்ளி இறுதி தேர்வு தேதிகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அதன்படி ஏப்ரல் 10ஆம் தேதி நடைபெற இருந்த அறிவியல் தேர்வு 22ஆம் தேதியும், 12ஆம் தேதி நடைபெற இருந்த சமூக அறிவியல் தேர்வு 23ஆம் தேதிக்கும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது.

கருத்துக் கணிப்பு (7)

தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளை வெளியிட தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது. மக்களவை தேர்தல் 2024, ஏப்ரல் மாதம் 19ஆம் தேதி தொடங்கி ஜூன் மாதம் 1ஆம் தேதி வரை 7 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. இந்நிலையில், ஏப்ரல் மாதம் 19 ஆம் தேதி காலை 7 மணி முதல் ஜூன் 1 ஆம் தேதி மாலை 6.30 மணி வரை உள்ள கால கட்டத்தில் தேர்தல் கருத்துக்கணிப்புகள் எதையும் வெளியிடக் கூடாது என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மோடி (13)

மறைந்த முன்னாள் பிரதமர் பி.வி. நரசிம்மராவுக்கு இன்று பாரத ரத்னா விருது வழங்கப்பட்டதை அடுத்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி அவருக்கு சமூக வலைதளப்பதிவின் மூலம் புகழாரம் சூட்டியுள்ளார். மதிப்பிற்குரிய அறிஞரும் சிந்தனையாளருமான பி.வி.நரசிம்மராவ், நாட்டின் முன்னேற்றம் மற்றும் நவீன மயமாக்கலுக்காக பெரிதும் பாடுபட்டவர் என்றும், அவரது பணி ஒவ்வொரு இந்தியனும் போற்றுவதாக அமைந்துள்ளது என அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார். இதேபோல் பாரத ரத்னா விருது பெற்ற முன்னாள் பிரதமர் சௌத்ரி சரண்சிங், பீகார் முன்னாள் முதலமைச்சர் கர்பூரி தாக்கூர், பிரபல வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் ஆகியோரின் தன்னிகரற்ற சேவைகளை நினைவுகூர்ந்து தனித்தனியே வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் பாராட்டியுள்ளார்.

ஐபிஎல் (7)

ஐபிஎல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில், லக்னோவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் லக்னோ சூப்பர் ஜெயின்ட்ஸ் அணி, பஞ்சாப் கிங்ஸ் அணியை எதிர்கொள்கிறது. நாளை அகமதாபாத்தில் நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் அணி, ஹைதராபாத் அணியுடனும், விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள மற்றொரு

போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியுடனும் மோதவுள்ளன.

கடற்படை (12)

கடற்கொள்ளையை எதிர்த்து போராடுவதிலும், கடல்சார் நடவடிக்கைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் இந்திய கடற்படைக்குப் பெருமை சேர்க்கும் விதமாக கடற்கொள்ளையர்களிடம் இருந்து மற்றொரு கப்பலை மீட்டு இந்திய கடற்படை சாதனை படைத்துள்ளது. அரபிக் கடலில் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட ஈரான் மீன்பிடி கப்பலில் இருந்த 23 பாகிஸ்தானியர்களை இந்திய கடற்படையினர் பத்திரமாக மீட்டனர். இந்திய கடற்படை கப்பலான ஐஎன்எஸ் சுமேதா மற்றும் ஐஎன்எஸ் திரிசூல் ஆகியவை இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு 12 மணி நேரத்திற்கும் மேலாக போராடி கொள்ளையர்களிடமிருந்து இந்தியக் கடற்படை, மீன்பிடிக் கப்பல்களை மீட்டு பாதுகாப்பான பகுதிக்கு அழைத்துச் சென்றது.

விழிப்புணர்வு வாசகம் 1 (18)

புதுச்சேரி தலைமைத் தேர்தல் அலுவலர் அலுவலகமும், புதுச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்தின் மண்டல செய்திப் பிரிவும் இணைந்து, புதுச்சேரி மக்களவைத் தொகுதி வாக்காளர்களுக்கான, தேர்தல் விழிப்புணர்வு தமிழ் வாசகம் எழுதுதல் போட்டியை

அறிவித்துள்ளன. முறையான வாக்காளர் கல்வி, மற்றும் தேர்தல் பங்கேற்பிற்கான SVEEP இயக்கத்தின் கீழ் இப்போட்டி நடத்தப்படுகிறது.

வாக்காளர் கடமைகள், 100 சதவிகித வாக்களிப்பு, நேர்மையான தேர்தல், தேர்தல் ஆணையத்தின் மொபைல் செயலிகள், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் தேர்தலின் பங்கு, வாக்குச் சாவடி வசதிகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்டோர் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதி போன்ற கருத்துக்களை மையப்படுத்தி, தமிழில் விழிப்புணர்வு வாசகங்களை, வாக்காளர்கள் இப்போட்டிக்கு அனுப்பி வைக்கலாம். எதுகை – மோனை - சந்தம் போன்ற அம்சங்களுடன், ஓசை நயத்துடனும், புதியதாகவும், புதுமையானதாகவும் வாசகங்கள் இருக்க வேண்டும்.

வாக்காளர்கள் தங்களின் பெயர், முகவரி, மற்றும் மொபைல் எண்ணுடன், அதிகபட்சம் 5 விழிப்புணர்வு வாசகங்களை, 94 43 30 83 76 என்ற வாட்ஸ் அப் எண்ணிற்கு, வரும் ஏப்ரல் 3ஆம் தேதி மாலை 5

விழிப்புணர்வு வாசகம் 2 (5)

மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்படும் வாசகங்களுக்கு, முதல் பரிசாக ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபாய், 2ஆம் பரிசாக இருவருக்கு தலா 2 ஆயிரம் ரூபாய், மற்றும் 3ஆம் பரிசாக மூவருக்கு தலா ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் வாசகங்கள், வாக்காளர் விழிப்புணர்வுக்காக அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பப்படும்.

பரப்புரை டி.வி. வானொலி (9)

அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கு தொலைகாட்சி மற்றும் வானொலியில் தேர்தல் பரப்புரை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது. தேசிய கட்சிகள் தூர்தர்ஷனில் 15 மணி நேரத்திற்கு குறையாமலும், மாநில கட்சிகள் 30 மணி நேரத்திற்கு குறையாமலும் பரப்புரை மேற்கொள்ள நேரம் ஒதுக்கீடு செய்யப்படும் என ஆணையம் அறிவித்துள்ளது. இதேபோல் வானொலியிலும் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகள் பரப்புரை மேற்கொள்ள நேரம் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

வாபஸ் (13)

முதற்கட்ட மக்களவை தேர்தல் 2024 வரும் 19ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில் இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று மாலை வெளியிடப்பட்டது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 40 மக்களவை தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளது. கடந்த 20ஆம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கிய நிலையில் 27ஆம் தேதி வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. ஏற்கப்பட்ட வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கு இன்று கடைசி நாள் என்பதால் இன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டு வேட்பாளர்களுக்கான சின்னங்களும் ஒதுக்கப்படும். புதுச்சேரியில் 27

வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் ஏற்கப்பட்ட நிலையில், சுயேச்சை வேட்பாளர் திருமதி பிரவீணா தனது வேட்பு மனுவை திரும்பப் பெற்றதால், இந்த மக்களவை தேர்தலில் மொத்தம் 26 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். பீகார் மத்திய பிரதேசம், மஹாராஷ்டிரா, உத்தரபிரதேசம், மேற்கு வங்கம் உள்ளிட்ட 17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களில் 102 மக்களவை தொகுதிகளுக்கும் வரும் 19ஆம் தேதி முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

சுவரொட்டி (18)

புதுச்சேரியில் மக்களவை தேர்தலில் 100 சதவிகித வாக்குப்பதிவை உறுதி செய்யும் நோக்கில் வாக்களிப்பதன்அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் புதுச்சேரி தேர்தல் துறை SVEEP திட்டத்தின்கீழ் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக தேசிய மயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகளுடன் இணைந்து வங்கிகளின் ஏடிஎம் செயல்படும் இடங்களில் வாக்காளர் விழிப்புணர்வு சுவரொட்டிகள் ஒட்டப்பட உள்ளன. இன்று மாலை நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன் வாக்காளர் விழிப்புணர்வு சுவரொட்டிகளை வெளியிட்டு, வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்களின் பார்வைக்குத் தெரியும்படி வைக்க வேண்டும் என வங்கி அதிகாரிகளை

கேட்டுக்கொண்டார். இந்த சுவரொட்டியில் 15 விதமான வாக்காளர் விழிப்புணர்வு கருத்துகள் மற்றும், இந்திய தேர்தல் ஆணையத்தின் செயலிகள், கட்டணமில்லா தொலைபேசி எண் போன்ற விவரங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை தேர்தல் அதிகாரி திரு. வினயராஜ், இந்தியன் வங்கியின் முதன்மை மாவட்ட மேலாளர் சதீஷ்குமார் உள்ளிட்ட வங்கி அதிகாரிகள் மற்றும் தேர்தல் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சிறுதானியம் (9)

சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டு 2023-ன் நிறைவு விழா இத்தாலியின் ரோமில் உள்ள உலக உணவு மற்றும் வேளாண் அமைப்பின் தலைமையகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் மத்திய வேளாண் துறையின் கூடுதல் செயலாளர் திருமதி மணீந்தர் கௌ திவேதி கலந்து கொண்டு, சிறுதானியங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதில் இந்தியா மேற்கொண்ட செயல்பாட்டை எடுத்துரைத்தார். இந்தியாவின் முன்மொழிவைத் தொடர்ந்து, 70க்கும் மேற்பட்ட நாடுகளின் ஆதரவுடன் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 2023ஆம் ஆண்டை சர்வதேச சிறு தானியங்கள் ஆண்டாக அறிவித்தது குறிப்பிடத்தக்கது,

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பாரத ரத்னா விருதுகளை இன்று புதுடெல்லியில் வழங்கினார்.

தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்புகளை வெளியிட தேர்தல் ஆணையம் தடைவிதித்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மக்களவை தேர்தலில் போட்டியிடும் இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று மாலை வெளியிடப்படுகிறது.

புதுச்சேரி தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. குலோத்துங்கன் தலைமையில் இன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. MS/NV/VM